# முன்னுரை

வேதாகம மாணவர்களில் பலர், ஏதாவதொரு வேளையில், “வேதாகமம் என்பது தேவனுடைய மிகச் சரியான, தவறற்ற வசனமாய் இருக்கின்றதா?” என்ற பெரிய கேள்வியை ஆழ்ந்து சிந்திக்கின்றார்கள். இது போன்ற மற்ற கேள்விகள் பின்வருமாறு சுருக்கிக் கேட்கப்படலாம்: “இயேசு மற்றும் சபையைப் பற்றிக் குறிப்பான மற்றும் மிகச் சரியான தகவல்களைக் கொடுப்பதாகவும், கிறிஸ்துவின் உபதேசத்திற்கான தனிப்பட்டதொரு வழிகாட்டியாகவும் மற்றும் ஒழுக்க நெறி, நல்லொழுக்கம் ஆகியவற்றில் தேவைப்படும் தரம் கொண்டதாகவும் வேதாகமத்தை நாம் நம்ப முடியுமா?”

வேதாகமம் தேவனால் கொடுக்கப்பட்டது. காலங்களினூடே அது ஒப்படைக்கப்பட்டு, நம்பிக்கைக்குத் தகுதியான வழியில் அது பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆகையால், சரியாக மொழிபெயர்க்கப்பட்டு, தகுதியான விதத்தில் விளக்கம் தரப்படுகின்ற பொழுது, அதன் செய்தியானது தேவனால் விரும்பிக் கேட்கப்படும் ஒழுக்கத்தின் தரம் கொண்டதாக இருக்கின்றது. மற்றும், புதிய ஏற்பாடானது முழுமையான கிறிஸ்துவின் உபதேசமாய் இருக்கின்றது. இந்தப் பாடங்களில் நாம், வேதாகமத்தின் ஏவுதலையும் அதன் அதிகாரமுடைமையும் கவனிப்போம்.

## “ஏவுதல்” என்பதன் விரிவான விளக்கம்

தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களுக்குள்ளாகப் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்து, தெய்வீக சத்தியத்தைப் பிழையின்றிக் கூறுவதற்குத் தகுதியான வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு வல்லமையளித்து இவ்விதமாகத் தேவனுடைய எண்ணங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தி,வேதாகமமானது தேவனுடைய ஏவுதலினால் தரப்பட்டதாயிருக்கின்றது. “ஏவுதல்” என்பது “உள் மூச்சிழுத்தல்” (in மற்றும் spiro) என்று அர்த்தப்படும் இலத்தீன் வார்த்தைகளில் இருந்தும், “தேவ - ஆவிக்குள்ளாகுதல்” அல்லது “தேவன் - சுவாசித்தல்” (theopneustos) என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தை ஒன்றில் இருந்தும் வந்ததாய் இருக்கின்றது. வேதாகமத்தை எழுதியவர்களுக்குள்ளாகப் பரிசுத்த ஆவியை தேவன் வைத்தார், அவர் (ஆவியானவர்) மூலமாகத் தேவன் அவர்களை வேதாகமம் எழுதுவதில் வழி நடத்தினார். இவ்விதமாக, “ஏவுதல்” என்பது தேவன்

*தம்முடைய ஆவியை மனிதர்களுக்குள் ஊதி, அவர்கள் தெய்வீக சத்தியங்களைத் தவறின்றிக் கூறும் வல்லமையளித்தார். வேதாகமத்தில் தேவனே பேசுகின்றார்!*

*வேதாகமத்தை எழுதியவர்கள் தாங்கள் அறிந்த உண்மைகளையும், ஏவுதலின்றி தாங்கள் அறிந்திராத உண்மைகளையும் எழுதினார்கள். அவர்கள் தாங்களே கவனித்திருந்தவை, இருந்த பதிவேடுகள் அல்லது வாய் மொழிப் பாரம்பரியம் ஆகியவற்றிலிருந்து அறிந்த உண்மைகளை எழுதினார்கள். இவர்கள் எழுதியவற்றில் பெரும்பான்மையானவைகள் தேவனிடத்திலிருந்து வந்த வெளிப்படுத்துதல் மூலமாக இவர்களுக்கு முதல்முறையாக அறிவுக்கு எட்டியவைகளாகும். அவர்கள் அறிந்த உண்மைகளையோ அல்லது வெளிப்படுத்துதலையோ, எதை எழுதினாலும், செய்தித் தொடர்பில் எவ்விதத் தவறுமின்றி சத்தியத்தை மட்டுமே அறிவதற்கு ஏவுதல் அவர்களை வழி நடத்தியது.*

## வேதாகமத்தின் ஏவுதலுக்கான உரிமை கோருதல்கள்

*வேதாகமமே தனக்குள் ஏவுதலை உரிமைகோருகின்றது. "வேதாகமம் ஏவப்பட்டது என்பதால் நான் அதை விசுவாசிக்கின்றேன் மற்றும் வேதாகமம் ஏவப்பட்டதென்று அதுவே கூறுவதால் நான் வேதாகமம் ஏவப்பட்டதென்று விசுவாசிக்கின்றேன்" என்று கூறுவது பயனற்றதாகும். சுற்றி வளைக்கும் காரண அறிவு என்பது வேதாகமத்தின் ஏவுதலுக்குப் போதுமானதல்லாத ஆதாரம் ஆகும். இருந்தாலும், வேதாகமத்தின் ஏவுதலுக்கான உரிமைகோருதல்கள், வேதாகமத்தின் தெய்வீகத் தொடக்கத்தை நிலைநிறுத்தும் விபரங்களின் முக்கிய பாகமாக இருக்கின்றன.*

### பழைய ஏற்பாட்டிற்கான உரிமை கோருதல்கள்

*பழைய ஏற்பாடு தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகள் என்பதற்கு 3800க்கும் மேற்பட்ட உரிமை கோருதல்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வுரிமை கோருதலானது, பழைய ஏற்பாட்டின் சராசரிப் பதிப்பு ஒன்றில் ஒரு பக்கத்திற்கு 2 1/2 முதல் 3 தடவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆகமத்தில் (ஆதியாகமம் முதல் உபாகமம் வரையுள்ள ஐந்து ஆகமங்கள்), "கர்த்தர் மோசேக்குக் கூறியதாவது" என்றோ அல்லது மோசே, கர்த்தருடைய வார்த்தைகளைத் திருப்பிக் கூறுவதாகவோ, இந்த உரிமைகோருதலானது 420 முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன (யாத். 17:14; 19:6, 7; 20:1; 24:4, 7; 35:29). சங்கீதம் 119ல் அதன் எழுத்தாளர், வேதவசனங்களை "கர்த்தருடைய வசனம் [அல்லது வசனங்கள்]" என்று 24 முறைகள் அழைத்தார். வேதவசனங்களுக்கான இந்த உரிமைகோருதலை இதே எழுத்தாளர் பல்வேறுபட்ட விளக்கங்களின் மூலம் இதில் 175 முறைகள் ஏற்படுத்தியுள்ளார். தீர்க்கதரிசிகள், தங்களிடத்தில் கர்த்தர்*

*பேசியிருந்தவைகளையே தாங்கள் கூறியதாக அல்லது எழுதியதாக உரிமை கோரினார்கள். இந்த உரிமைகோருதலானது ஏசாயாவால் 120 முறைகளும், எரேமியாவால் 430 முறைகளும், எசேக்கியேலால் 329 முறைகளும், ஆமோஸால் 53 முறைகளும், ஆகாய்யால் 27 முறைகளும் மற்றும் சகரியாவால் 53 முறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

*பழைய ஏற்பாடு என்பது தேவன் பேசியதே என்று இயேசு அறிவித்தார். பரிசேயர்களிடத்தில் அவர், "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே" (மத். 15:4) என்று கூறினார். ஒன்றிணைக்கப்பட்ட இந்த மேற்கோளில் (யாத். 20:12; 21:17; உபா. 5:16; லேவி. 20:9 ஆகியவற்றைக் காணவும்), இவ்வெழுத்துக்கள் யாவும் தேவனுடைய வசனமென்று இயேசு அறிவித்தார். அவர் ஆதி. 2:24ல் இருந்து மேற்கோள் காண்பித்து, "ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா?" (மத். 19:4, 5) என்று கூறினார்.*

*தாவீது, சங்கீதம் 2:1ஐ எழுதினாரென்றும் அதைப் பரிசுத்த ஆவியானவரால் பேசிய தேவனுடைய இயல்பைச் சார்ந்ததாகவும் ஆதி சீஷர்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள். அவர்கள், "கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர். புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும் ... தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே" (அப். 4:24-26) என்று ஜெபித்தார்கள். அப். 13:33-35ல் பவுல், ஏசாயா 55:3ன் கூற்றையும் சங்கீதம் 16:10ன் கூற்றையும் தேவனுடைய இயல்பைச் சார்ந்தது என்று குறிப்பிட்டார்.*

*பழைய ஏற்பாட்டை "வேதவாக்கியங்கள்" என்று குறிப்பிட்ட பவுல் அது தேவ ஆவியினால் அருளப்பட்டதாகக் கூறினார் (2 தீமோ. 3:16, 17). பேதுரு, "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேது. 1:20, 21) என்று அறிவித்தார்.*

### புதிய ஏற்பாட்டிற்கான உரிமை கோருதல்கள்

*கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகள் "தேவனுடைய வசனம்" அல்லது பரலோகத்திலிருந்து வந்த வழிநடத்துதல் என்று கூறப்படுகின்றன. இயேசு பிரசங்கித்த பொழுது, "... திரளான ஜனங்கள் தேவ வசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள்" (லூக். 5:1)*

*என்று வேதாகமம் கூறுகின்றது. இயேசுவே நித்திய சத்தியமாய் இருப்பதாக அவரே அறிவித்தார் (யோவா. 14:6). அவர், "... என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்" என்று கூறினார் (யோவா. 8:28). இயேசு தம்முடைய பிரிவு உபசார ஜெபத்தில், "நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக் கொண்டு ... நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன் ..." (யோவா. 17:8-14) என்று கூறினார்.*

*இயேசு தம்முடைய சபையைக் கட்டப் போவதாக வாக்குத்தத்தம் செய்த பொழுது, அவர் "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை" அப்போஸ்தலர்களுக்குத் தருவதாக வாக்குத்தத்தம் செய்தார். இந்தத் திறவுகோல்களை அவர், கட்டவும் கட்டவிழ்க்கவும் உள்ள அதிகாரமான சபையின் ஆளுகை சட்டங்கள் என்ற வகையில் விளக்கப்படுத்தினார் (மத். 16:18, 19). பரலோகத்தின் இந்தச் செய்தியை அறியச் செய்ய அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அவர் வாக்குத்தத்தம் செய்தார் (யோவா. 14:26). "சத்திய ஆவியான" இந்த வாக்குத்தத்தத்துடன் அவர், "அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதி முதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (யோவா. 15:26, 27) என்றும் கூடக் கூறினார். பின்னாளில் அவர், சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவா. 16:13, 14). இந்த வாக்குத்தத்தங்கள் ஐந்து மடங்கானவைகளாய் இருக்கின்றன: எல்லாவற்றையும் அவர்களுக்குப் போதிப்பதற்கு, இயேசு கூறியிருந்த யாவற்றையும் அவர்களுக்கு நினைப்பூட்டுவதற்கு, இயேசுவைப் பற்றிச் சாட்சி கூறுவதற்கு, சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழி நடத்துவதற்கு மற்றும் வரப்போகிற காரியங்களை அவர்களுக்கு அறிவிப்பதற்கு.* René Paché *அவர்கள், இது புதிய ஏற்பாட்டின் ஏவுதல் ஒவ்வொன்றையும் உள்ளடக்குகின்றதென்று சுட்டிக்காட்டினர்: சுவிசேஷங்கள் - "பரிசுத்த ஆவியானவர் ... நான் உங்களுக்குச் சொன்ன யாவற்றையும் நினைப்பூட்டுவார்"; நடபடிகள் - "அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்; நீங்களும் சாட்சி கொடுப்பீர்கள்"; நிருபங்கள் - "சத்திய ஆவியானவர் ... சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்; ... அவர் என்னை மகிமைப்படுத்துவார்"; வெளிப்படுத்தின விசேஷம் - "வரப்போகிற யாவற்றையும் அவர் உங்களுக்கு வெளிப்படுத்துவார்"* (René Paché, *The Inspiration and Authority of Scripture,* trans. Helen I. Needham).

*இயேசு அந்த வாக்குத்தத்தத்தை ஏற்படுத்திய சற்றுக் காலத்திற்குள்ளாகவே அதன் நிறைவேற்றம் பற்றி லூக்கா எழுதினார். அப்போஸ்தலர்களைக் குறித்து அவர், "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்த போது ... அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு*

பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்" (அப். 2:1-4) என்று அறிவித்தார். இவ்விதமாகத் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக பேசப்பட்ட மற்றும் எழுதப்பட்ட செய்தியானது தேவனுடைய வசனம் என்று அறியப்பட்டது. நடபடிகள் புத்தகமானது இவ்வுண்மையை 8:14; 11:1; 12:24; 13:7, 44; 15:35 ஆகிய வசனங்களில் உறுதிப்படுத்துகின்றது.

உறுதியற்ற சொற்றொடர்களில் பவுல் இந்த ஏவுதலை உரிமைகோரவில்லை. அறிவியல் முறைமையிலோ அல்லது தத்துவத்தின் மூலமாகவோ சத்தியத்தை ஒருவர் அறிய முடியாதென்று உறுதிப்படுத்திய அவர், பின்வருமாறு கூறினார்.

> எழுதியிருக்கிறபடி: "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணியவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை"; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் (1 கொரி. 2:9-13).

மேலும் பவுல், "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன் ..." (1 கொரி. 11:23) என்றும் கூறினார். பின்னாளில் பவுல் தெசலோனிக்கேயருக்கு, "... வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங் கொண்டிருந்தோம்" என்று கூறினார் (1 தெச. 2:2). மேலும் அவர், "ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக் கொண்ட போது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே ... ; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது" (1 தெச. 2:13); "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது ..." (1 தெச. 4:15) என்றும் கூறினார்.

புதிய ஏற்பாடு முழுவதும் தேவனுடைய வசனமாயிருக்கிறது என்று எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது: "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் பிதாக்களுக்குத்

*திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; ...” (1:1, 2).*

## “ஏவுதலை” நெருக்கமாய்க் கண்ணோக்குதல்

*ஏவுதல் பற்றிய பல கோட்பாடுகள், வேதாகமத்தில் ஏவுதலைப்பற்றி நேரடியாகவும் மறைமுகமாகவும் உள்ள கருத்துக்கு ஏற்புடையவைகளாய் இருப்பதில்லை. வேதாகமமானது ஒரு தெய்வீக/மனுஷீகப் புத்தகமாய் இருக்கின்றது. சிலர், வேதபாரகர்கள் மேஜையின் முன் அமர்ந்து வேதாகமத்தை எழுதுவதை மட்டுமே காண்கின்றார்கள்; அவர்கள் வேதாகமத்தை மனுஷீகமான ஒரு புத்தகமாக மட்டுமே காண்கின்றார்கள். மற்றவர்கள், வார்த்தைக்கு வார்த்தை ஆவியானவர் கூற அதை அப்படியே வேதபாரகர் எழுதியதாகச் சித்தரிக்கின்றார்கள்; அவர்கள் வேதாகமத்தை முற்றிலும் ஒரு தெய்வீகமான புத்தகமாக மட்டுமே காண்கின்றார்கள். வேதபாரகர் உட்கார்ந்து எழுதுவதையும், பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை வெளிப்படுத்தி, எழுதுவதை மேற்பார்வை செய்வதையும் ஆகிய இரு செயல்களையும் காண்பதே ஏற்புடையதாகும். வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை ஒவ்வொரு எழுத்தாளரும் சொந்த சொல் திறமை மற்றும் எழுத்துப்பணி மற்றும் அவர் ஏற்கனவே அறிந்திருந்த விஷயங்கள் ஆகியவை கொண்டு எழுதினார்கள். ஆவியானவரின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட சிந்தனைகள் மற்றும் வார்த்தைகள் ஆகியவற்றை மட்டுமே அவர் எழுதினார். இருப்பினும், அவர் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலைகளுக்கேற்ற செய்தியையும் கூட அவர் எழுதினார்.*

*வேதாகமமானது அதன் எல்லா பாகங்களும் ஏவுதல் பெற்றதென்று உரிமைகோருகின்றது. “வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது” (2 தீமோ. 3:16, 17) என்று பவுல் அறிவித்தார். உபா. 25:4 மற்றும் லூக்கா 10:7 ஆகியவற்றிலிருந்து பவுல் மேற்கோள் காட்டுகையில் அவ்விரண்டையும் “வேத வாக்கியம்” என்று குறிப்பிட்டார் (1 தீமோ. 5:18). இவ்விதமாய் அவர், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் முழுவதிலும் முழு நிறைவான, பூரணமான ஏவுதல் உள்ளதென்று அந்த ஏவுதலினாலேயே உறுதிப்படுத்தினார்.*

*தேவன் தம்முடைய சத்தியங்கள் விளக்கப்பட்டதற்கான வார்த்தைகளைத் தேர்ந்தெடுப்பதையும் கட்டுப்படுத்தினார் என்பதையும் வேதாகமம் உறுதிப்படுத்துகின்றது. இது, வேதாகமம் வார்த்தைக்கு வார்த்தை (தேவன்) கூறி எழுதப்பட்டதென்று உரிமைகோருவதில்லை, ஆனால் வேதாகமத்திற்குத் தெய்வீகமான மேற்பார்வையிடுதல் இருந்தது என்று உரிமைகோருகின்றது. எரேமியா, “கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: ‘இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே*

*வைக்கிறேன்' '' (எரே. 1:9) என்று கூறினார். ஏவுதலுக்கான இதே உரிமைகோருதல்கள் பின்வரும் வசனப் பகுதிகளிலும் ஏற்படுத்தப் பட்டுள்ளன: யாத். 4:10, 14, 15; உபா. 18:18-20; 2 சாமு. 23:1, 2; ஏசா. 1:10; எசே. 2:7; 3:4, 10; தானி. 10:9-11; ஓசி. 1:1; யோவே. 1:1. இயேசு தமது சீஷர்களைப் பின்வரும் வாக்குத்தத்தத்துடன் அனுப்பி வைத்தார்.*

> *அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டு போகப்படுவீர்கள். அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது: எப்படிப் பேசுவோம் என்றும் என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர் (மத். 10:18-20).*

*பவுல் பின்வருமாறு கூறியதன் மூலம், வேதாகமம் வாய் மொழியாக ஏவப்பட்டது என்று நேரடியாக உரிமை கோருதலை ஏற்படுத்தினார்:*

> *நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் (1 கொரி. 2:12, 13).*

*வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்தல், பெயர்ச் சொற்களால் சுட்டிக்காட்டப்படும் எண்ணிக்கை (ஒருமை அல்லது பன்மை) மற்றும் வினைச் சொற்களின் கால வடிவம் ஆகியவை பரிசுத்த ஆவியானவரால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கக் கூடிய அளவு போதிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று வேதாகமம் சுட்டிக்காட்டுகின்றது. புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் சிலர், தங்களின் விமர்சன விவாதங்கள் முழுவதையும் ஒரே ஒரு வார்த்தையின் அர்த்தம், எண்ணிக்கை அல்லது கால வடிவத்தின் அடிப்படையில் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். உயிர்த்தெழுதல் குறித்த ஒரு விளக்கத்தை இருத்தல் என்ற வினைச் சொல்லின் காலவடிவின் அடிப்படையில் இயேசு ஏற்படுத்தினார். அவர், ''நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன்'' (மத். 22:31) என்று பிதாவானவர் உரைத்ததை மேற்கோள் காட்டி, அந்த மனிதர்கள் மரணம் அடையவில்லை என்று அர்த்தப்படுவதாக உறுதிப்படுத்தினார். ஆதி. 12:7ல் தேவன் கிறிஸ்துவைக் குறிப்பிட்டார் என்பதைக் காண்பிக்கப் பவுல், தேவன் ''சந்ததிகள்'' என்ற பன்மைச் சொல்லைப் பயன்படுத்தாமல், ''சந்ததி'' என்ற ஒருமைச் சொல்லைப் பயன்படுத்தியதைச் சுட்டிக் காட்டினார் (கலா. 3:16).*

## ஏவுதலுக்கான சில ஆதாரங்கள்

வேதாகமத்தின் உரிமைகோருதலை ஏவுதலுக்கான ஆதாரமானது தாங்கி நிலை நிறுத்துகின்றது. வேதாகமமானது தெய்வீக தொடக்கம் கொண்டிருப்பதால் மட்டுமே இன்னமும் இருக்கின்றது என்பதே போதுமான விளக்கம் என்று இணைந்த ஆதாரம் காண்பிக்கின்றது.

### வேதாகமம் தொடர்ந்து நிலைத்திருத்தலும், மொழிபெயர்ப்பும் மற்றும் சுற்றோட்டமும்

வேதாகமம் ஏவுதல் பெற்றது என்பதைத் தாங்கி நிலைநிறுத்தும் ஒரு ஆதாரமாக உள்ளது அதன் தொடர்ந்து நிலைத்திருக்கும் தன்மையும், மொழிபெயர்ப்பு மற்றும் சுற்றோட்டம் ஆகியவற்றின் குறிப்பிடத் தக்க கோட்பாடு ஆகும். காலத்தின் அழிக்கும் கூறுகளுக்கிடையிலேயும் வேதாகமம் தப்பிப் பிழைத்திருக்கிறது. அழிவின் சக்திகள் மற்றும் மோசேயின் காலம் முதல் இந்நாள் வரையிலும் (சுமார் 3500 ஆண்டுகள்) கவனிப்பாரற்ற நிலை ஆகியவற்றினூடே பழங்காலப் புத்தகம் ஒன்று தொடர்ந்து நிலைத்திருக்கிறது என்பது உண்மையிலேயே குறிப்பிடத் தக்கதாக உள்ளது. பழங்காலத்தில் எழுதப்பட்ட புத்தகங்களின் தயாரிப்பும் சுற்றோட்டமும் அவைகள் கைகளினால் மட்டும் எழுதப்பட்டது என்பதால் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே வெளியாயின என்ற வரையறையினால் கட்டுப்படுத்தப் பட்டிருந்தன. இந்தப் பழங்காலத்திய புத்தகங்கள் நெருப்புகள், புயல்கள், பூச்சிகள், அழிவு, புறக்கணிப்பு, மண், புழுதி மற்றும் எதிரிகளையும் கூட எதிர்கொண்டன. வேதாகமம் தொடர்ந்து நிலைத்திருக்கிறது என்பது - பல கையெழுத்துப் பிரதிகள், படிவங்கள் மற்றும் மேற்கோள்கள் ஆகியவற்றின் கனத்த அங்கீகாரத்துடன் இணைந்து இருப்பதென்பது - திகைப்பூட்டுவதாகவே இருக்கின்றது.

வேதாகமமானது மாபெரும் உபத்திரவம் மற்றும் விமர்சனத்தையும் தாங்கி நிலைத்திருப்பதாய் உள்ளது. ரோமச் சக்கரவர்த்திகளின் காலத்தில் இருந்து சமீப நாட்களில் உலகின் சில பாகங்களில் ஏற்பட்டுள்ள கம்யூனிஸத்தின் ஆதிக்கம் வரையிலும், வேதாகமத்தை அழிக்க எழுந்த முயற்சிகளினால் வேதாகமம் உபத்திரவப்படுத்தப்பட்டுள்ளது. அது துன்புறுத்தப்பட்டு, தடை செய்யப்பட்டு மற்றும் எரிக்கப்பட்டும் இருந்துள்ளது. புத்தகங்களில் இது ஒரு வேதசாட்சியாக உள்ளது, ஆனால் செல்வாக்கிலும் விநியோகத்திலும் இது வெற்றிகரமாகப் பிழைத்துள்ளது. பழங்காலத் தத்துவ வாதிகளான செல்ஸஸ் மற்றும் போர்ஃபைரி ஆகியோரின் அழிக்கும் விமர்சனத்திற்குப் பின்பு வேதாகமமானது ஆயிரம் ஆண்டுகள் காலம் வரைக்கும் சமாதானமான நிலையை அனுபவித்தது. இது மனிதர்களால் வேறு எந்தப் புத்தகத்திற்கும் மேலானதாக மதிக்கப்பட்டது. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, தாமஸ் ஹோப்ஸ் (1588-1679) மற்றும் பாரூக் ஸ்பினோஸா (1632-77) ஆகியவர்கள் வேதாகமத்தின் மீது விமர்சனத் தாக்குதல் தொடுத்தார்கள். பிறகு ஜீன் அஸ்ட்ரக் (1684-1766)கினால் செய்யப்பட்ட விமர்சனமானது ஒவ்வொரு நுணுக்கமான விபரத்தின் மீதும்

*கவனம் செலுத்தப்பட்ட தொடர்ச்சியான தாக்குதல் வரிசையைத் தொடங்கி வைத்தது, பெர்னார்டு ரேம் என்பவர் "வேறு எந்தப் புத்தகமும் இந்த அளவுக்கு வெட்டப்பட்டதோ, துருவப்பட்டதோ, சலிக்கப்பட்டதோ, கூர்ந்து ஆராயப்பட்டதோ மற்றும் பாதகப்படுத்தப்பட்டதோ கிடையாது" என்று கூறினார்* (Bernard Ramm, *Protestant Christian Evidences*). *உபத்திரவத்தினால் பலர் வேதாகமத்தைச் சென்று அடையும் வழியை இழந்து போனாலும், இன்னும் பலர் வெறுப்பான விமர்சனத்தின் விளைவாக சந்தேகத்திற்கு இடமில்லாமல் தங்கள் விசுவாசத்தை இழந்து போனாலும், எழுதப்பட்ட புத்தகங்களிலேயே வேதாகமம்தான் இன்னமும் அதிகமாய் வெளியிடப்பட்ட புத்தகமாய் இருக்கின்றது.*

*வேதாகமமே வேறு எந்தப் புத்தகத்தை விடவும் அதிகமாய் மொழிபெயர்க்கப்பட்டதாகவும் இருக்கின்றது. வேதாகமமே முதலாவதாக மொழிபெயர்க்கப்பட்ட புத்தகம் ஆகும். (எபிரெயப் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த் என்பது ஏறக்குறைய கி.மு. 250ல் மொழிபெயர்க்கப்பட்டது). இது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதுடன், இப்பொழுதுள்ள வேறு எந்த புத்தகத்தை விடவும் ஏராளமாய்ப் பொழிப்புரை ஏற்படுத்தப்பட்டதாகவும் இருக்கின்றது. வேதாகமம் தேவனால் ஏவப்பட்டது என்ற உரிமைகோருதலை மேற்சொன்ன உண்மைகளும் தாங்கி நிலைநிறுத்துகின்றன.*

**வேதாகம வரலாற்றின் ஒருமைப்பாடும் தொடர்வும்**

*ஒரு மருந்துப் புட்டியானது அது தன்னைப் பற்றிக் கூறிக் கொள்ளும்படியானது உண்மையா இல்லையா என்பதை அறிவதற்கு அதில் உள்ளதை ஆராய்ந்து பார்ப்பதுவே ஒரே ஒரு வழியாகும். மாணவர் ஒருவர், வேதாகமம் என்பது தேவனுடைய வசனமா அல்லவா என்பதை அதனுள் அடங்கியிருப்பவைகளைச் சோதித்துப் பார்த்தால் அறிய முடியும்.*

*வேதாகமம், ஒரு மாபெரும் அற்புதம் ஆகும். வேதாகம எழுத்துக்களின் ஒருமைப்பாடும் தொடர்வும், அவைகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியொன்றின் வழிநடத்துதலின் கீழ் உண்டாக்கப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. பல நாடுகளில் வாழ்ந்து, பல தொழில்களில் பங்கேற்று, மாறுபட்டிருந்த கல்விப் பின்னணிகள் கொண்டிருந்து, பதினைந்து நூற்றாண்டு கால இடைவெளியின் வித்தியாசப்பட்ட வேளைகளில் வாழ்ந்திருந்தவர்களாகிய நாற்பது மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு வரலாற்றின் ஒரு சில வரிகளை எழுதியிருப்பதைக் கற்பனை செய்து பாருங்கள். மற்றும், இவ்வரிகள் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு அழகான மற்றும் உயர்கருத்துடைய வரலாறாகி, ஒவ்வொரு வரியும் அடுத்த வரியுடன் பூரணமாய் இணைந்து முழு வரலாற்றையும் கூறி முடிப்பதையும் கற்பனை செய்து பாருங்கள். இப்படிப்பட்டதொரு செயல் நிறைவேற்றப்பட முடிந்தாலும் கூட, அந்த எழுத்தாளர்கள் யாவரும் ஒரே*

சிந்தனையினால் இயக்கப்பட்டிருப்பார்கள் என்பது தெளிவாகும்.

இதன் எழுத்தில் ஈடுபட்ட மக்களும் காலமும். ஏறக்குறைய வாழ்க்கையின் ஒவ்வொரு வகை நடையிலும் இருந்தவர்கள் - எகிப்தில் கல்வி பயின்று, அரசியல் தலைவராய் இருந்த மோசே; இராணுவத் தலைவராய் இருந்த யோசுவா; இராஜாவாயிருந்த சாலொமோன்; மேய்ப்பனாய் இருந்த ஆமோஸ்; பிரதம மந்திரியாய் இருந்த தானியேல்; பானபாத்திரக்காரராயிருந்த நெகேமியா; வைத்தியராய் இருந்த லூக்கா; ஆயக்காரராய் இருந்த மத்தேயு; மீன்பிடிப்பவராய் இருந்த பேதுரு; ரபீயாய் இருந்த பவுல் முதலிய பல்வேறுபட்ட மனிதர்கள், அறுபது தலைமுறைகளைக் கொண்ட பதினைந்து நூற்றாண்டு கால இடைவெளியில் அறுபத்தியாறு புத்தகங்கள் அல்லது நிருபங்களை எழுதினார்கள். அவர்கள் வித்தியாசப்பட்ட இடங்களில் இருந்து - மோசே வனாந்தரத்திலும், எரேமியா ஒரு சுரங்க அறையிலும், தானியேல் ஒரு மலைப் பகுதி மற்றும் அரண்மனையில் இருந்தும், பவுல் சிறைச்சுவர்களுக்குள் இருந்தும், லூக்கா தரையிலும் கடலிலும் பயணம் செய்கையிலும், யோவான் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்ட வேளையிலும் இவைகளை எழுதினார்கள். மாபெரும் மகிழ்ச்சி மற்றும் வருத்தத்தின் ஆழங்கள் ஆகியவற்றில் இவர்கள் எழுதினார்கள். இவர்கள் எபிரெயு, கிரேக்கு மற்றும் அரமாயிக் மொழிகளில் இவற்றை எழுதினார்கள். நூற்றுக்கணக்கான வித்தியாசப்பட்ட பாடக்கருத்துக்கள் உட்பட்ட விஷயங்களை இவர்கள் எழுதினார்கள். இந்த எழுத்தாளர்கள் தொடர்ச்சி யான, மலராத வரலாறு என்ற வகையில் மனிதனின் வரலாறு பற்றியே - அவனது தோற்றம், வீழ்ச்சி, மீட்பு மற்றும் நித்திய அடைவிடம் பற்றியே - ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் இசைவாகவும், தொடர்வாகவும் எழுதினார்கள்.

மையமானதொரு சத்தியம் அல்லது வரலாறு வளரச் செய்யப்பட்டது. வேதாகமத்தின் மையமானதொரு சத்தியம் வளர்க்கப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்ட விதமானது, இது தேவனுடைய வசனம் என்பதற்கு ஆதாரமாய் உள்ளது. தத்துவ மற்றும் மத அமைப்புகள் என்பவை வழக்கமாக ஒரு மனதின் வேலையாக, ஒரு நபரின் வாழ்நாளில் உருவாக்கப்பட்டதாகவே இருக்கின்றன. விஷயம் அப்படியிருக்கும் பொழுது ஒருமைப்பாடு எவ்விதம் பராமரிக்கப்பட்டது, மற்றும் கருத்துக்கள் எவ்விதம் தொடர்பு படுத்தப்பட்டு இசைவிக்கப்பட்டது என்பதை ஒருவர் சுலபமாய்ப் புரிந்து கொள்ள முடியும். வேதாகமமானது அவ்வகையில் வளர்ச்சியடையவில்லை. அது ஒரு தனி மனித சிந்தையால் உருவானதோ அல்லது ஒரு மனிதரின் வாழ்நாளுக்குள் உண்டானதோ அல்ல. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் பல மனிதர்களின் முயற்சிகளால் தான் வேதாகமம் விளைந்தது. அதன் வரலாறானது வளர்ச்சியின் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குத் தொடர்ந்து செல்வதாக உள்ளது - ஆதாம் ஏவாளின் வீழ்ச்சியில் இருந்து, ஏதேனில் இழந்து போகப்பட்ட ஜீவ விருட்சத்தை மீட்டுக் கொணர்வதற்காக சபை வளர்ச்சியுற்றது வரையிலும் அது கூறுகின்றது. அது ஒவ்வொரு நிலையாகத் தொடர்ந்து வளருவதாய்

*உள்ளது. அடிமைத்தனம், இணைந்த இராஜ்யம், பிரிந்த இராஜ்யம் மற்றும் சிறைப்பிடிக்கப்படுதல். இவ்வளர்ச்சியானது இயேசுவின் பிறப்பு, அவரது வாழ்வு, அவரது மரணம், அவரது உயிர்த்தெழுதல், ஆவியானவரை அனுப்புதல் மற்றும் சபையை நிலைநாட்டி, உறுதிப்படுத்துதல் வரையிலும் தொடர்கின்றது. ஆதியாகமத்தில் இழக்கப்பட்ட பரலோகம் வெளிப்படுத்தின விசேஷத்தில் மீண்டும் பெறப்படுகின்றது. வேதாகமம் என்பது சுயாதீனமான எழுத்துக்களின் தொகுப்பல்ல, ஆனால் ஒரே வரலாற்றைக் கூறுகின்ற, ஒன்றையொன்று உட்சார்ந்துள்ள எழுத்துக்களால் ஆன ஒரே புத்தகம் ஆகும். அற்புதமானதொரு ஒருமைப்பாடு இது முழுவதையும் ஒன்றாகப் பிணைக்கின்றது.*

*பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டினால் தொடரப் படுகின்றது. பழைய ஏற்பாடானது மேசியாவைப் பற்றிய வாக்குத்தத்தத்துடன் முடிவதையும், புதிய ஏற்பாடானது அவரது வருகையுடன் தொடங்குவதையும் ஒருவர் கவனிக்கும் பொழுது, பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் உள்ள பிணைப்பானது தெளிவாகின்றது. "இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகின்ற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல்கியா 3:1) என்று மல்கியா கூறியதன் மூலம் தம் வாசகர்களை, கிறிஸ்துவையும் அவருடைய முன்னோடியையும் எதிர்பார்த்துக் காத்திருக்கச் செய்தார். "இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களின் இருதயத்தைப் பிள்ளைகளிடத் திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்" (மல்கி. 4:5, 6) என்று கூறுகையிலும் சேனைகளின் கர்த்தர் மேற்கோள் காட்டப்பட்டார். முன்னோடியையும் மேசியாவையும் முன்னிறுத்துவதன் மூலம் நான்கு சுவிசேஷங்களும், மல்கியா விட்ட இடத்திலிருந்து தொடங்குகின்றன. யோவான் ஸ்நானனின் வருகையை முன்னிறுத்துவதன் மூலம் மாற்கு "தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்" (மாற். 1:1) என்று அதைக் குறிப்பிடுகின்றார். யோவான், எலியாவின் ஆவியோடும் பலத்தோடும் கர்த்தருக்கென்று மக்களை ஆயத்தப்படுத்துவதற்காக வந்ததாக லூக்கா கூறுகின்றார் (லூக். 1:17).*

*புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு நிறைவேற்றம் அடைதல். "தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது" என்பது போன்ற விளக்கங்களால் திரும்பத்திரும்ப (மத். 1:22; 2:6, 15, 18, 23; 3:3; 4:16 ஆகியவற்றைக் காணவும்) பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கிடையில் உள்ள பிணைப்பானது தெளிவாக்கப்பட்டது. வேதாகமத்தின் தொடக்க பாகங்கள் கிறிஸ்துவையும் அவரது இராஜ்யத்தையும் பற்றிய*

*எதிர்பார்ப்பினால் எழுதப்பட்டன, இவை யாவும் உண்மையாயின என்ற உறுதிப்பாட்டுடன் பிற்பகுதிகள் எழுதப்பட்டன. பேதுரு பின்வருமாறு அறிவித்தார்:*

> *உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்ன தென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப் பார்க்கத் தேவ தூதரும் ஆசையாயிருக்கிறார்கள் (1 பேது. 1:10-12).*

*வேதாகமத்தின் ஒருமைப்பாடு, வளர்ச்சி மற்றும் தொடர்வு ஆகியவை, அது இயற்கைக்கு மேலான கட்டுப்படுத்தும் ஒரு சிந்தையினால் உண்டாக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துமளவுக்குப் பெரியவைகளாய் இருக்கின்றன. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் ஒன்றிணைந்து நிற்கவோ அல்லது வீழ்ச்சியுறவோ கூட இந்தப் பண்புகள் தேவைப்படுகின்றன.*

*ஒரே ஒரு முரண்பாடுள்ள பாடக்கருத்தைப்பற்றிய உலகப் பிரகாரமான மாபெரும் இலக்கியம், வரலாறு மற்றும் தத்துவ எழுத்துக்களின் பத்தே பத்து புத்தகங்களை மட்டுமே ஒருவர் எடுத்துக் கொள்வாரென்றால், அவைகளில் கூட அவர் இசைவைக் காண முடியாது. அவர் தாம் விரும்பிய பத்து புத்தகங்களைத் தேர்ந்து கொண்டாலும் கூட, ஒன்றிலிருந்து மற்றதற்கு அவர் தொடர்வைக் காண முடியாது!*

## *முடிவுரை*

*வேதாகமம் தேவனால் ஏவப்பட்டுள்ளது, மற்றும் அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய விரும்புபவர்களுக்கு அவ்வுண்மையைப் பற்றி நம்பத் தகுந்த ஆதாரங்களையும் அது கொடுக்கின்றது. கிறிஸ்து மற்றும் இரட்சிப்பு பற்றிய அதன் செய்தியைத் தலைமுறைதோறும் கூறுவதற்காக அது வாழ்ந்திருக்கின்றது.*